**பக்கம் 1:**

மனித கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான
அகில உலக ஜெப நாள் 2023

# நான்
# அவர்கள் விண்ணப்பத்தை
# கேட்டேன்

ஜெப மைய ஆதாரம்

ஜெப மையம் | 1

புரிந்து கொள்ளுவதற்கான ஜெபம்

வரிசை 1:

மனித சடத்தல் என்பது சட்டத்திற்கு புறம்பாக மனிதர்களை பணியில் சேர்ப்பது, கட்டாயப்படுத்தியோ ஏமாற்றியோ வேலை செய்யவைத்தல், கொத்தடிமைதனம் மற்றும் பாலியல் சுரண்டல் போன்ற நவீன அடிமைத்தனம் ஆகும்.

உங்களுக்கு தெரியுமா?

உலக அளவில் நவீன அடிமைத்தனமும் மனித கடத்தலாலும் பாதிக்கபடுகிற மக்களின் எண்ணிக்கை எப்போதும் இல்லாத அளவில் 49.6 மில்லியன் என்று அதிகரித்து கொண்டே செல்கிறது. இது உலகளாவிய சராசரி ஆகும்.

- 27.6 மில்லியன் மக்கள் கடின உழைப்பையும் பாலியல் சுரன்டலையும் அனுபவித்து வருகின்றனர்
- 22 மில்லியன் மக்கள் கட்டாய திருமணத்திற்குள்ளாக்கப்படுகின்றனர்.

ஆதாரம்: நவீன அடிமைத்தனத்தின் உலகளாவிய மதிப்பீடு: கட்டாய வேலை மற்றும் கட்டாய திருமணம், உலக வேலையாள்னகின் அமைப்பு, சுதந்திரமாக நடத்தல் மற்றும் அகில உலக அகதிகள் அமைப்பு, ஜெனிவா 2022.

வரிசை 2:

வேதபகுதி: வருடங்கள் கடந்தபின் எகிப்தின் மன்னர் மரணமடைந்தார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் அடிமைத்தனத்தின் பாடுகளின் நிமித்தம் முறையீட்டு கொண்டிருந்தனர் (யாத்திராகமம் 2:23)

ஜெப செயல்பாடு

ஒரு அரிசியை எடுத்து உங்கள் கையில் வைத்துக்கொள்ளுங்கள். அந்க அரிசியை ஒரு நபர், ஒரு குடும்பம் மற்றும் ஒரு கதையாக உருவகபடுத்தி கொள்ளுங்கள். கீழ்கண்ட ஜெபகுறிப்புகளை உங்கள் ஜெபத்திற்கு வழிகாட்டியாக எடுத்துகொள்ளுங்கள்:

- நவீன அடிமைத்தனம் மற்றும் மனித கடத்தலின் வித்தியாசமான நிலைகளை கண்டுகொள்ள நமது கண்களை திறக்க ஜெபியுங்கள்
- எது நவீன அடிமைத்தனம் மற்றும் மனித கடத்தல் என்பதை நாம் அறிந்துக்கொள்ள ஜெபியுங்கள்.
- அரசு, அமைப்புகள், சமூகங்கள் மற்றும் தனி மனிதர்கள் அதை பார்க்கவும் கேட்கவும் ஜெபியுங்கள்.

அடிக்குறிப்பு:

1. ஜெப நிலைய ஆதாரம்

**பக்கம் 2:**

ஜெப நிலைய ஆதாரம்

வரிசை 1:

உடல் ரீதியாகவோ மனரீதியாகவோ மிரட்டியோ வன்முறையை கையாண்டோ ஒருவர் மற்றொருவரை கட்டுபடுத்துவது மனித கடத்தல் ஆகும். அவர்களுடைய சுதந்திரம் முற்றிலுமாக அவர்களைவிட்டு எடுபட்டிருக்கும். கடத்தினவர் அவர்களுடைய வாழ்க்கையை, தனித்தன்மையை, உறவை, தெரிவு செய்வதை, இயக்கத்தை கட்டுபடுத்திகொண்டிருப்பார். இந்த நீதியற்ற தன்மையை அனுபவித்து கொண்டிருப்பவர்கள் தங்களால் இந்த நிலைமையை மாற்றமுடியாது என நம்பிகொண்டிருப்பார்கள்.

வேதபகுதி :
'இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து முறையிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவ சந்நிதியில் எட்டினது. தேவன் அவர்கள் பெருமூச்சை கேட்டார் ' (யாத்திராகமம் 2:23-24).

ஜெப நடவடிக்கை

ஒரு சிறு துண்டு காகிதத்தையும் கத்தரிகோல் ஒன்றையும் எடுத்து கொள்ளுங்கள். சங்கிலியை உடைப்பதை போல அதை துண்டித்து காட்டுங்கள். கீழ்கண்ட ஜெபகுறிப்புகளை உங்கள் ஜெபத்திற்கு வழிகாட்டியாக பயன்படுத்தி கொள்ளுங்கள்:

வரிசை 2:

- உலக அளவிலும் வீடுகளிலும் மனித கடத்தலால் பாதிக்கபட்ட மக்களின் விடுதலைக்காகவும் அவர்களின் பாதுகாப்பிற்காகவும் ஜெபியுங்கள்.
- கடத்தல்காரர்கள் தங்கள் செய்கைகளை முடிவிற்கு கொண்டுவர அவர்கள் இதயத்தில் செயல்பட ஜெபியுங்கள்.
- நவீன அடிமைத்தனம் மற்றும் மனித கடத்தல் முடிவுக்குவர ஜெபியுங்கள்.

ஜெப நிலையம் 3

சுகத்திற்கான ஜெபம்.

வரிசை 1:

நவீன அடிமைத்தனம் மற்றும் மனித கடத்தல் ஒரு நபரின் உடல், உணர்ச்சி, உளவியல் மற்றும் ஆன்மீகத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. பாதிக்கப்பட்டவர்கள் குறுகிய மற்றும் நீண்ட நாள்களாக நினைத்துபார்க்க முடியாத துயரங்களை அனுபவித்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பின் அதிர்ச்சியிலிருந்து மீண்டு எழும்ப பணிசெய்வது அவசியமமாகிறது.

நல்ல செய்தி என்னவென்றால் அங்கே நம்பிக்கையுள்ளது. ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு மதிப்பு உள்ளது அது அழிக்க முடியாது. எப்படி கீழ்தரமாக மதிப்பிட்டாலும் கூட.

வரிசை 2:

ஒரு நபர் மீதான கடவுளின் மதிப்பு குறைவதேயில்லை. கடவுள் தன் மக்கள் மீதான மதிப்பால் தன் குமாரனை சிலுவையில் பலியாக அனுப்பி வைத்தார். அவருடைய உன்னதமான தியாகத்தால் குணபடுத்துதலையும் புதிய வாழ்க்கையையும் அனைவரும் பெற்றிருக்கிறோம்.

வேதபகுதி :
‘இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து முறையிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவ சந்நிதியில் எட்டினது. தேவன் அவர்கள் பெருமூச்சை கேட்டார் ’ (யாத்திராகமம் 2:23-24).

அடிக்குறிப்பு:

2. ஜெப நிலைய ஆதாரம்

பக்கம் 3:

வரிசை 1:

ஜெப நடவடிக்கை

குணப்படுத்துதலுக்கு அடையாளமாக ஒரு பிளாஸ்டரை எடுத்துக்கொள்ளுங்கள். கீழ்கணட ஜெப குறிப்புக்களை குணப்படுத்துதலுக்கான ஜெபத்திற்கு வழிகாட்டியாக பயன்படுத்தி கொள்ளுங்கள். ஜெபத்தை நிறைவு செய்தபிறகு அந்த பிளாஸ்டரை கருப்பு பதாகையில் ஒட்டுங்கள்.

- மனித கடத்தலால் பாதிக்கப்பட்ட நபரின் உடல், உணர்ச்சி, உளவியல் மற்றும் ஆன்மீக சுகத்திற்காக ஜெபியுங்கள்.

வரிசை 2:

- மனித கடத்தலினால் பாதிக்கப்பட்டவர்கள் நீண்டகால உதவி மற்றும் கவனிப்பு நிறைந்த பாதுகாப்பான இடத்தை கண்டுகொள்ள ஜெபியுங்கள். அவர்கள் உதவி கேட்க தேவையான ஆதாரங்களை கண்டுபிடிக்க ஜெபம் செய்யுங்கள். குறிப்பாக மொழி தெரியாத நாடுகளில் உள்ள மக்களுக்காக.
- தங்கள் அன்பிற்குரியவர்களை பிரிந்த குடும்பங்களுக்காக ஜெபியுங்கள்.

ஜெப நிலையம் 4

நீதிக்கான ஜெபம்.

வரிசை 1:

பழைய ஏற்பாட்டில் “மிஸ்பாத்” என்ற எபிரேய பதம் நீதியை குறிக்கிறது. வேதாகம கருத்து கடவுளின் உண்மையான திட்டமான மக்கள் மற்றும் படைப்புகளின் அமைதி மாறுபடுவதை அடிப்படையாக கொண்டது ஏனென்றால் அநீதி உலகத்தை ஆக்கிரமிக்கும்போது அதை சரி செய்து மீட்டெடுக்க தேவையான நிலையை குறிக்கிறது. மிஸ்பாத் அல்லது நீதி என்பது உலகத்திலுள்ள மக்கள் மற்றும் படைப்புகள் நடத்தபடுவதையும் செழிப்பாக வாழ தேவையானதையும் குறிக்கும். இது அநீதியிலிருந்து வெளிப்படும் அடக்குமுறை, பாதுகாப்பற்ற, ஒழுங்கற்ற நிலையிலிருந்த மாற்றம் நிறைந்த செழிப்பான வாழ்வின் திட்டம் ஆகும்.

நவீன அடிமைத்தனம் மற்றும் மனித கடத்தல் என்பது எங்கு மக்கள் சுரண்டபடுகிறார்களோ, பயன்படுத்தபடுகிறார்களோ, துஷ்பிரயோகம் மற்றும் நீதியற்ற நிலையில் நடத்தபடுகிறார்களோ அங்கு நடைபெறும் மனித உரிமை மீறல் ஆகும்.

நாம் பூமியில் கடவுளின் நீதியை செயல்படுத்தும் மத்தியஸ்தர்களாக அழைக்கப்பட்டிருக்கியோம். மத்தியஸ்தர்களாக, அவர்கள் சரியான முறையில் நடத்தபடுவதை காணவும், சரியான வாழ்க்கை வாழவும், கடவுளின் நீதியை பெற பாதிக்கப்பட்டவர்களின் கூட்டாளிகளாகவும் இருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்.

வரிசை 2

‘இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து முறையிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவ சந்நிதியில் எட்டினது. தேவன் அவர்கள் பெருமூச்சை கேட்டு, தாம் ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார் ’ (யாத்திராகமம் 2:23-24).

ஜெப நடவடிக்கை

ஒரு பேனாவை எடுத்து காகித சங்கிலியில் முடியுங்கள் என்று எழுதுங்கள். கீழ்கண்ட ஜெபகுறிப்புகளை உங்கள் நீதிக்கான ஜெபத்திற்கு வழிகாட்டியாக பயன்படுத்தி கொள்ளுங்கள்:

- நவீன அடிமைத்தனம் மற்றும் மனித கடத்தலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க அவர்கள் சார்பாக ஜெபம் பண்ணுங்கள்.
- ஊழல் மற்றும் அடிமை சங்கிலி உலகத்திலிருந்து அழிய ஜெபம் பண்ணுங்கள்.
- இந்த அநீதிக்கு எதிராக போராடும் மக்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்.

அடிக்குறிப்பு:

3. ஜெப நிலைய ஆதாரம்

பக்கம் 4:

ஜெப நிலையம் 5

ஆலயங்கள் எழும்ப ஜெபம்

வரிசை 1:

இரட்சணிய சேனை உலகம்முழுவதும் இதற்காக ஜெபிக்க, தடுக்க, பாதுகாக்க, பங்குகொள்ள, பங்குதாரராக மற்றும் வழக்கிட, பாலிசி மேம்படுத்த, ஆதாரங்களை திரட்ட பணி செய்கிறது. இது ஒருவராலோ இருவராலோ அல்லது ஒரு அமைப்பாலோ செய்ய கூடிய காரியம் அல்ல. ஒவ்வொருவரும் இதற்காக போராட தேவைபடுகிறார்கள். சபையே எழுந்திரு! இரட்சணிய சேனையே எழுந்திரு!

‘இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து முறையிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவ சந்நிதியில் எட்டினது. தேவன் அவர்கள் பெருமூச்சை கேட்டு, தாம் ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார் தேவன் இஸ்ரவேல் புத்திரரை கண்ணோக்கினார். தேவன் அவர்களை நினைத்தருளினார் ’ (யாத்திராகமம் 2:23-25).

ஜெப நடவடிக்கை

உலக வரைபடத்தில் ஒரு நாட்டை குறித்துக்கொள்ளுங்கள் அங்குள்ள இரட்சணிய சேனைக்காகவும் சபைகள் எழும்பவும் ஜெபியுங்கள். அந்த நாட்டில் உள்ள சபைக்காக ஒரு சிறு துண்டு காகிதத்தில் ஒரு ஜெபத்தை எழுதி ஒட்டுங்கள்.

வரிசை 2

உலக வரைபடத்தில் ஒரு நாட்டை குறித்துக்கொள்ளுங்கள். கீழ்கண்ட ஜெபகுறிப்புகளை சபைகள் எழும்ப ஜெபத்திற்கு வழிகாட்டியாக பயன்படுத்தி கொள்ளுங்கள்:

- உலக அளவில் நவீன அடிமைத்தனம் மற்றும் மனித கடத்தலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக எழும்ப ஜெபியுங்கள்
- நவீன அடிமைத்தனம் மற்றும் மனித கடத்தலை முடிவுக்கு கொண்டுவர ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க ஆலங்கள் இணைந்து பணி செய்ய ஜெபியுங்கள்
- நவீன அடிமைத்தனம் மற்றும் மனித கடத்தலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பாதுகாப்பு, ஆதரவு மற்றும் ஆறுதலை வழங்கும் சபைகளுக்காக ஜெபியுங்கள்.

இரண்டு பக்கங்களில்:

| |
|---|
| ஜெப நிலைய ஆதாரம் உருவாக்கியவர்<br><br>கேப்டன் மெரிலின் வால்டர்ஸ் ( ஹவாய் மற்றும் பசிபிக் தீவு டிவிஷனின் டிவிஷனல் இளைஞர் மற்றும் ஸ்தானார்திகள் செயலர்)<br><br>மேஜர் ரே லாமன்ட் (நவீன அடிமைத்தனம் மற்றும் மனித கடத்தல் பதிலின் ஒருங்கிணைப்பாளர் - கனடா மற்றும் பர்முடா. கரீபியன் மற்றும் வட அமெரிக்க பிராந்திய ஒருங்கிணைப்பாளர். அகில உலக நவீன அடிமைத்தனம் மற்றும் மனித கடத்தல் பதிலின மையம் - துணை தலைவர் |

அடிக்குறிப்பு:

4. ஜெப நிலைய ஆதாரம்